‘எல்லாவற்றிலும் வல்லுநர் எ.வ.வேலு’ என அனைவரும் பாராட்டும் அளவுக்கு மிகுந்த திறமை வாய்ந்தவர் அமைச்சர் எ.வ.வேலு!

# பத்திரிகைச் சுதந்திரத்தின் பெரிய காப்பாளர், கலைஞர்!

## அமைச்சர் எ.வ.வேலு எழுதிய, ‘கலைஞர் எனும் தாய்’ நூல் வெளியீட்டு விழா ஆய்வுரையில் – இந்து என். ராம் புகழாரம்!

**சென்னை, ஆக. 31 –**

**அமைச்சர் எ.வ.வேலு எழுதிய, ‘கலைஞர் எனும் தாய்’ நூல் வெளியீட்டு விழா ஆய்வுரையில், “பத்திரிகைச் சுதந்திரத்தின் பெரிய காப்பாளர், கலைஞர்” என்றும் ‘எல்லாவற்றிலும் வல்லுநர் எ.வ.வேலு’ என அனைவரும் பாராட்டும் அளவுக்கு மிகுந்த திறமை வாய்ந்தவர் அமைச்சர் எ.வ.வேலு என்றும் – இந்து என். ராம் புகழாரம் சூட்டினார்.**

பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு எழுதிய ‘கலைஞர் எனும் தாய்’ நூலின் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் 24.8.2024 அன்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு இந்து என்.ராம் அவர்கள் ஆற்றிய ஆய்வுரை வருமாறு :-

கலைஞர் முத்துவேல் கருணாநிதி அவர்கள், இந்திய அரசியலின் மூத்த தலைவராக பன்முகத் திறமை, நீண்ட ஆயுள் மற்றும் போராட்ட மனப்பாங்கிற்காக பிரபலமானவர்.

5 முறை முதல்வர்; 50 ஆண்டுகளாக தி.மு.க.வின் தலைவர்; போட்டியிட்ட 13 முறைகளிலும் சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்; அரசியலில் கலைஞர் சாதித்ததை எட்டிப் பிடித்த வர்கள் இந்திய அரசியலில் யாரும் இருக்க முடியாது என்று தெளிவாக தெரிகிறது. அவர் மறைவிற்குப் பிறகு பல தரப்பிலிருந்து வந்த பாராட்டுகளும் அவரது சிறப்புத்தன்மையையே பிரதிபலித்தது.

அவர் மாநில அரசியலில் கவனம் செலுத்தினார். கிங் மேக்கர் என்று சொல்வார்கள் – தி.மு.க. பல நேரங்களில் கிங் மேக்கராக இருந்திருக்கிறது. வேறு மாநில கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் பதவியை பிடிக்க முயற்சித்தார்கள். ஆனால் இங்கு கான்சென்ட்ரேஷன் அதேபோலதான், இன்றைக்கு இருக்கும் தமிழ்நாடு முதலமைச்சரும். அந்த ஃபோக்கஸ் இருப்பதனால்தான் தமிழ்நாடு இந்தியாவிலேயே நம்பர் 1 ரேங்க்ஐ அடைந்திருக்கிறது. அந்த போக்கஸ் இல்லை என்றால் இந்த அளவிற்கு வளர்ச்சி ஏற்பட சாத்தியமில்லை. அதனால் கலைஞர் அவர்கள் மாநில அரசியலில் கவனம் செலுத்தினார். ஆனால் நாட்டின் பல பிரச்சினைகளிலும் வெளிநாட்டு பிரச்சினைகளிலும் ஆழமான இன்ட்ரஸ்ட் எடுத்தார். அதைப் பற்றி எழுதினார்; பேசினார்; யோசித்தார். அதை முக்கியமான அம்சம் என்று கருதுகிறேன்.

**கலைஞரிடம் இருந்த நேர்மை – உறுதி!**

Autonomy & Federalism மாநில சுயாட்சி & கூட்டாட்சி அவருடைய உறுதியான கொள்கைகள். அவர் சலியாத உழைப்பாளி; படைப்பாளி; நிர்வாகி; தொட்ட துறைகளில் எல்லாம் முத்திரை பதித்தவர். சிறு கதைகள், நாவல்கள், நாடகங்கள், திரைப்படம் என அனைத்து துறைகளிலும் அவர் கோலோச்சினார்.

“Kalaignar was not born with silver spoon”– அவர் சிறுவயதிலேயே



பள்ளியில் படிக்கும்போதே அரசியலில் இறங்கி, வாழ்நாள் முழு வதும் அந்த பிடிப்பு இருந்தது; உறுதி இருந்தது; தைரியம் இருந்தது; நேர்மை இருந்தது; அதனால்தான் இன்றைக்கு அவரை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

அன்றைக்கு நம்முடைய ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வரும்போது நானும் அங்கு கேட்டுக் கொண்டிருந்தேன். முதலமைச்சர் சொன்னது போல, எந்த தி.மு.க. தலைவரும், உறுப்பினரும் அந்த அளவிற்கு கலைஞரை புகழ்ந்ததில்லை. அந்த அளவிற்கு அவருடைய ஃபெடரலிசம்; அவருடைய ஜனநாயக பற்று; இது பற்றி எல்லாம் நன்றாக பேசினார் ராஜ்நாத் சிங் அவர்கள்.

**சுயமரியாதை –**
**கலைஞரின் சொத்து!**

சுயமரியாதை கலைஞருடைய சொத்து. இது எல்லாம் உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

நானும் ஒரு மூத்த நண்பராகத்தான் கலைஞரைப் பார்த்தேன். பல விஷயங்களில் அவரை அணுக முடியும். ஏதாவது யோசனை இருந்தாலோ, ஏதாவது பிரச்சினை இருந்தாலோ, ஏதாவது கமெண்ட் இருந்தாலோ அவரை சுலபமாக அணுக முடியும். ஏன் என்றால், அவரே ஒரு எழுத்தாளர்; பத்திரிகையாளர்; பத்திரிகை சுதந்திரத்திற்கு பெரிய காப்பாளராக இருந்தார். எழுத்து சுதந்திரம், “Freedom of Speech & Expression” அதில் முக்கியமான சாம்பியனாக வாழ்நாள் முழுவதும் அவர் இருந்தார்.

இந்த “All Round Capability” – இதுதான் அவருடைய ஸ்பெஷல். அவருடைய கிரேட்னஸ்க்கு எக்ஸ்பிலநேசன். சலிக்காமல் உழைப்பார். ஹார்ட்வொர்க்கிங். அதனால் இன்றைக்கு அதிக நேரம் நான் பேச வேண்டிய வாய்ப்பு இருக்காது, பேசத் தேவையுமில்லை. ஏனென்றால் அவருடைய கிரேட்னஸ் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இந்த நூலுக்கு தாய் என்ற தலைப்பு வந்தது, மிகவும் பொருத்தமானது, ஒரு முயற்சி. அமைச்சர் வேலு அவர்கள், அதை மிகவும் யோசித்து, ஆழமாக பரிசீலனை செய்து, எவ்வாறு தாயை பாதுகாப்பார்களோ அதேபோல கட்சியையும், கட்சியை மட்டும் அல்ல திராவிட இயக்கத்தையும் பாதுகாத்து, தமிழ் மொழிக்கு அந்த பேஷன் அதெல்லாம் எப்படி இருந்தது தாய் என்பது ஒரு பொருத்தமான தலைப்பு என்பதை நன்றாக இந்த நூலில் எடுத்து காட்டியுள்ளார்.

நம்முடைய ஆசிரியரைப் பற்றி, மைபா நாராயணன் ஒரு விஷயத்தை சொன்னார். ஒரு குக்கிராமத்தில் பிறந்து, வளர்ந்து உதயநிதி அவர்கள் சொன்னது போல, எல்லாவற்றிலும் வல்லுநர்; “Very Efficient Man”; “Hard Working”; பஸ் கண்டக்டர் ஆக இருந்திருக்கிறார் என்று மைபா நாராயணன் என்னிடம் சொன்னார். ஒரு பஸ் கண்டக்டர், சூப்பர் ஸ்டார். இன்னொரு பஸ் கண்டக்டர், அமைச்சர் முக்கியமான போர்ஃபோலியோ இருக்கிறது. இதுதான் தமிழ்நாட்டுக்கு ஒரு பெருமை.

இன்னொரு விஷயத்தையும் சொல்லி விட்டு முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன். தாய் என்பது மாக்ஸிம் கார்க்கி என்பவரின் பிரபலமான ஒரு நாவல். லெனின் அவர்கள் கார்க்கி எழுதிய அந்த நாவலைப் பார்த்த பிறகு, அந்த நாவலின் குறைபாடுகளைப் பற்றி முதலில் பேசினாராம். என்னுடைய தாய் நாவலின் குறைபாடுகளைப் பற்றி பேசத் தொடங்கினார் என்று கார்க்கி எழுதுகிறார். அவர் அந்த நாவலை இன்னொருவரிடம் இருந்து வாங்கி மேனுஸ்கிரிப்ட் ஸ்டேஜ்லேயே படித்தாராம். “நாவல் எழுதுவதில் நான் அவசரப்பட்டேன்” என்று கார்க்கி சொன்னாராம். ஆனால் ஏனென்று விளங்குவதற்கு முன்னே, லெனின் தலையாட்டிவாறே அதற்கான காரணத்தை தானே குறித்தார், “அவசரமாக எழுதப்பட்டது சரியானதே. ஏனெனில் இந்த நாவல் இப்போது மிகவும் தேவைப்பட்டது. பல தொழிலாளர்கள் தன்னிச்சையாகவும், திடீரென்றும் புரட்சியில் இணைந்திருந்தனர். அவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்; நேரத்திற்கு ஏற்ற புத்தகம் இதுதான்”. இதுதான் கார்க்கிக்கு லெனின் அளித்த பாராட்டு. இது கார்க்கிக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொண்டு வந்தது.

எதனால் சொல்கிறேன் என்றால், அன்றைக்கு அவருடைய பார்வை அவசரமாக எழுதுவது தவறில்லை.

ஆனால், இதை வேலு அவர்கள் பல நாட்கள் கலைஞர்கள் காலத்திலேயே இதை ஆரம்பித்திருக்கிறார் போலும். இதன் தலைப்பு பற்றி அவரிடமே பேசியிருக்கிறார் என்றுதான் கேள்விப்பட்டேன்.

ஜோசப் ஸ்டாலின் அவர்கள், மார்க்சிம் கார்க்கியின் நூலைப் பற்றி என்ன சொன்னார் என்று தெரியாது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த நூலைப் பற்றி என்ன சொல்லுவார் என்று அனைவரும் எதிர்பார்க்கிறோம். இந்த புத்தகம் கொண்டு வந்தது, “It's an important Day for Tamilnadu”.

இவ்வாறு ‘இந்து’ என்.ராம் பேசினார்.

---

திண்டுக்கல் அருகே விருப்பாச்சியில் சுதந்திரப் போராட்ட வீரர்

# கோபால் நாயக்கருக்கு மணிமண்டபம் கட்டிப் பெருமை சேர்த்தவர் கலைஞர்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், ஆக. 31 –

திண்டுக்கல் அருகே ஒட்டன்சத்திரம் விருப்பாச்சியில் சுதந்திர போராட்ட வீரர் கோபால் நாயக்கருக்கு மணிமண்டபம் கட்டி நாயுடு நாயக்கர் சமுதாயத்தினருக்கு பெருமை சேர்த்தவர் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பெருமிதமாக பேசியதோடு கோபால் நாயக்கரின் 223வது நினைவு நாள் விழாவில் கலந்து கொள்வதாக தமிழ்நாடு நாயுடுநாயக்கர் உறவின்முறை பாதுகாப்பு இயக்க நிர்வாகிகளிடம் உறுதியளித்தார்.



திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு நாயுடு நாயக்கர் உறவின் முறை (பாதுகாப்பு இயக்கம்) சார்பாக சுதந்திர போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களின் 223வது நினைவு தினம் திண்டுக்கல் கோபால சமுத்திரக்கரையில் அனுசரிக்கப்பட்டது. கோபால்நாயக்கரின் 223வது நினைவு தினத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பங்கேற்க வேண்டி தமிழ்நாடு நாயுடுநாயக்கர் உறவின்முறை (பாதுகாப்பு இயக்கம்) நிறுவனத் தலைவர் சபாஷ்நாயுடு மற்றும் மாநில கௌரவ ஆலோசகர் கண்ணன், மாவட்ட கௌரவ ஆலோசகர் விஜயகுமார், மாநில சட்ட ஆலோசகர் கே.ஜே.குருமூர்த்தி, மாநில இளைஞரணி தலைவர் ஜனார்த்தனன், துணைத்தலைவர் இளங்கோ, திண்டுக்கல் மாவட்ட துணைச் செயலாளர் பாலாஜி மற்றும் தி.மு.க.வை சேர்ந்த முன்னாள் மாமன்ற உறுப்பினர் விஜயகுமார் ஆகியோர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டி வேண்டுகோள் விடுத்தனர்.

அப்போது அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது நான் வருவாய்துறை அமைச்சராக பதவியில் இருந்தேன். மறைந்த சுதந்திர போராட்ட வீரர் கோபால்நாயக்கருக்கு அவர் வசித்த பகுதியான விருப்பாச்சியில் மணிமண்டபம் கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டதாலும், துணை முதல்வராக இருந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி விருப்பாச்சியில் கோபால் நாயக்கருக்கு மணி மண்டபம் கட்டப்பட்டு இன்று வரை அரசு பராமரித்து வருகிறது. இதன்மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நாயுடுநாயக்கர் சமுதாயத்திற்கு பெருமை சேர்த்தவர்கள் முன்னாள் முதல்வர் கலைஞரும், இந்நாள் முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களே என்றார்.

அதன்பின்னர் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழ்நாடு அரசு விழாவாக அறிவித்தது அவருடைய புகழுக்கு மணிமகுடம் சூட்டியது போல் உள்ளது என்றார். அதன்பின்னர் நாயுடு சமுதாயத நிர்வாகிகளிடம் நீங்கள் ஒற்றுமையாக அனைவரும் வாருங்கள். நானும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வேன் என்று கூறினார்.

நிகழ்ச்சியின் போது தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாநில வர்த்தகரணி இணை செயலாளர் ஜெயன், திண்டுக்கல் மாநகர துணை மேயர் ச.ராஜப்பா, ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், ஆத்தூர் முருகேசன், ரெட்டியார்சத்திரம் மணி, தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஷ் பெருமாள், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், குட்டத்து ஆவரம்பட்டி டென்னி, அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் மணி (எ) நந்தகோபால், துணைத்தலைவர் ஜெயபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண், ஒன்றிய துணை பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்செல்வன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ரெட்டியார் சத்திரம் ரமேஷ், ஆத்தூர் ராஜகணேஷ், மேற்கு ஒன்றியம் காங்கேயன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லைசுபாஷ் மற்றும் தாடிக்கொம்பு முருகேசன், திண்டுக்கல் நகரக் கழக நிர்வாகிகள் நந்தி நடராஜன், நரசிங்கம், 7வது வார்டு வீரபாண்டி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

---

சிவகங்கை மாவட்டம் – சிங்கம் புணரியில்

# கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!

சிவகங்கை, ஆக. 31 -

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் ஒன்றிய, நகர பேரூர் கழகங்கள் வாயிலாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகின்றது. இதில் இரண்டாம் கட்டமாக இன்று (31.8.2024 - சனிக்கிழமை) திருப்பத்தூர் தொகுதியில் எஸ். புதூர் சிங்கம்புணரி ஒன்றியத்தில் கீழ்கண்டவாறு நடைபெறுகிறது.

நாள் 31 .8 .24. சனிக்கிழமை எஸ்.புதூர் பாரிவள்ளல் ஒன்றியம். நேரம் காலை 10.00 மணி இடம். வெற்றி வேல் திருமண மண்டபம் மணியாரம்பட்டி பகல் 12 மணி சிங்கம்புணரி வடக்கு, தெற்கு, பேரூர் கழகம். ரங்கநாதன் காந்திமதி பேலஸ் திருமண மண்டபம். சிங்கம்புணரி.

இந்த கூட்டத்தில் அந்தந்த ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை மாவட்ட செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

